## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## <u>O.S.No.33/2018</u>

DW1–ரத்தீஸ்குமார் நாள்.03.09.2025

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் எம்.டெக் படித்துள்ளேன். நான் மத்திய அரசு பணியில் பொறியாளராக பணிசெய்கிறேன். எதிர்வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலம் தயார் செய்ய நான் தான் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னேன். அதில் கண்ட விவரங்களை நான் நன்கு படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நான் தாவா சொத்தின் அருகில் வசித்துவரவில்லை. காரைக்குடியில் குடியிருக்கிறேன். தாவா சொத்து ஆதியில் பொன்னம்மாளுக்கும் அவருக்கு பின்னர் பொன்னம்மாள் மகன் சுப்ரமணியனுக்கும் அதன்பின்பு துரைராஜ் மகன் சுப்ரமணியனுக்கும் பின்பு சரோஜாவுக்கும் பின்பு ஜெயராணிக்கும் பாத்தியப்பட்டது. வாதியை எப்படி என்று எனக்கு தெரியும் என்றால் என்னுடைய உறவினரான புரோக்கர் பிரபாகரன் மூலம் தெரியும். பொதுவாக ஒரு சொத்தை வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்துவிட்டு வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். நான் சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்து வாங்கினேன். ஜெயராணி கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் வில்லங்கம் பார்த்தேன். தாவா சொத்து பெரம்பலூர் தாலுக்காவில் துறைமங்கலம் கிராமத்தில் புல எண்.13/2பி 1 எ–ல் கட்டப்பட்ட 2320 சதுரஅடி என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கடந்த 23.01.2015 அன்று கிரயம் வாங்கியுள்ளேன்.

**வாதி தரப்பு கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.